ஆடியில் ஒன்பது வெள்ளிக்கிழமைகளில் இரவு வெள்ளி தொட்டிகளில் ஊஞ்சல் உற்சவமும் பத்து ஞாயிற்றுக்கிழமைகள் பகல் 11 மணியளவில் முறையே 108 குடம் பாலபிஷேகம், 108 குடம் இளநீர் அபிஷேகம், 108 குடம் தயிர் அபிஷேகம், 108 குடம் மஞ்சள் அபிஷேகம், 108 குடம் சந்தன அபிஷேகம், 108 குடம் விபூதி அபிஷேகம், 108 குடம் பன்னீர் அபிஷேகம், 108 குடம் பஞ்சாமிர்த அபிஷேகம், 108 பூக்கூடையால் புஷ்பாஞ்சலியும் நடைபெறுகின்றது.

ஆடிக் கிருத்திகையில், ஸ்ரீ முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும், மயில் வாகனத்தில் ஸ்ரீ முருகப் பெருமாள் வீது உலாவும் நடைபெறுகின்றது. ஆடிப் பூரத்தன்று ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் சந்தன காப்பு அலங்காரமும் நடைபெறுகின்றது.

ஆவணி, புரட்டாசி மாத விழா

ஆவணியில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் நடைபெறுகின்றது. புரட்டாசியில் பத்து நாட்கள் சாரதா நவராத்திரி விழா நடைபெறுகின்றது. நவராத்திரியில் முதல் மூன்று தினங்கள் துன்பங்களை நீக்கும் துர்க்கா பரமேஸ்வரியாகவும், இரண்டாவது மூன்று நாட்களில் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அளிக்கும் ஸ்ரீ மகாலட்சுமியாகவும், கடைசி மூன்று நாட்களில் ஞானபாக்கியத்தைத் தரும் ஸ்ரீசரஸ்வதியாகவும் அருள்பாளிக்கின்றாள். இந்த நவராத்திரியின் ஏழாம் நாளன்று ஸ்ரீ அம்பாளுக்கு நவாவர்ண பூஜை நடைபெறுகின்றது. மேலும் இந்த நவராத்திரி தினங்களில் குழந்தைகளை அம்பாளாக பாவித்து பூஜை செய்வது சிறப்பு அம்சமாகும். மேலும், இந்த நவராத்திரி தினங்களில் மாலையில் இன்னிசை, சொற்பொழிவு, நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐப்பசி மாத விழா

ஐப்பசி பௌர்ணமியில் அருள்மிகு கமடேஸ்வரர் அருள்மிகு அருணாச்சலேஸ்வரருக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகின்றது. ஸ்ரீ முருகப் பெருமானுக்கு கந்த சஷ்டி உற்சவமும், லட்சார்ச்சனையும், சூரசம்ஹார உற்சவமும் நடைபெறுகின்றது. சூரசம்ஹாரத்தின் மறுநாள் ஸ்ரீ முருகப்பெருமான் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று மயில் வாகனத்தில் ஸ்ரீ முருகப் பெருமான் வீதியுலாவும் நடைபெறுகின்றன.

ஸ்ரீ முருகப் பெருமாள் திருக்கல்யாண உற்சவத்தின் போது பெண்களுக்கு மஞ்சள் குங்குமத்துடன் திருமாங்கல்ய சரடுகள் வழங்கப்படுகின்றன.

கார்த்திகை மாத விழா

கார்த்திகை மாதத்தில் சோம வாரங்களில் ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் இரவு வெள்ளித் தொட்டியில் ஸ்ரீ அம்பாள் அலங்காரத்துடன் கோயில் வெளிப் பிரகாரத்தில் வலம் வருவாள்.

கார்த்திகை தீபத்தன்று ஒன்பது பெரிய அகலில் தீபமேற்றி அம்பாள் எதிரில் மஹா தீபாராதனை நடைபெற்று ஒவ்வொரு சன்னதியில் மேற்படி அகல் தீபம் ஏற்றப்பட்டு இராஜகோபுரத்தில் மகா தீபம் ஏற்றப்படும். பின்பு, அலங்காரம் செய்யப்பட்ட அம்பாள் கோயிலில் வெளியில் வந்து நிற்க சொக்கப்பானம் கொளுத்தப்படும்.

இது தவிர ஆடிக் கிருத்திகை, தைக் கிருத்திகை, மாசிக் கிருத்திகை மற்றும் கந்த சஷ்டி முருகப் பெருமான் திருக்கல்யாண உற்சவத்தின் போதும் ஸ்ரீ முருகப் பெருமான் பச்சை மயில் வாகனத்திலும் சூரசம்ஹாரத்தின்போது சூர சம்ஹார உற்சவமும், சாரதா நவராத்திரி விஜயதசமி அன்று மகிடாசூரன் வதம் உற்சவமும் நடைபெறுகின்றது.

மார்கழி மாத விழா

மார்கழி மாதம் சிறந்த மாதம். கல்வியிற் சிறந்தவர் சூர்யமூர்த்தி, அவர் தேவகுருவாகிய வியாழ பகவானின் வீடாகிய தனுர் ராசியில் சஞ்சரிக்கின்ற மாதம் மார்கழி.

கண்ணபிரான் கீதையில் அர்ஜுனா ! நான் மாதங்களில் மார்கழி மாதமாக இருக்கின்றேன் என்கிறார். இம்மார்கழி தீட்சைக்கு உரிய மாதம் என்பார்கள் சான்றோர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் திருவாதிரை திருவிழாவும், பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீ ரங்கத்தில் ஏகாதசி திருவிழாவும் நடைபெறுவது மார்கழி மாதத்தில்தான்.

இத்தனை சிறப்பு வாய்ந்த மார்கழி மாதம் வைகறையில் செய்யும் வழிபாட்டைப்பற்றி சிவாகமத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"சாபகத பாநு திவாஸாந்த்ய நிசிகாலே
ஆதிசிவ தேவ்யாஸஹ ஏகதின பூஜா
ஏகதின பூஜாபலம் கோடி தினே நாஸ்தி
இந்த்ராபதி இந்த்ராசிவ கோடிதின வாஸம்"

மார்கழியில் விடியற்காலையில் உமையம்மையுடன் கூடிய சிவபெருமானை ஓர்நாள் வழிபாடு செய்வார்களாயின், அந்த ஒருநாள் பூஜை கோடி நாட்கள் செய்கின்ற பூஜைக்கு நிகராகும். மேலும் இந்திரனைப் போன்ற சிறப்புடன் இந்திரனுடைய நாட்களில் கோடி நாட்கள் இன்புற்று இனிது வாழ்வார்கள் என்பது இதன் கருத்தாகும். (நமது ஆண்டுகளில் 360 கொண்டது ஒரு தேவ ஆண்டாகும்.)

இவ்வளவு சிறப்பு வாய்ந்த மார்கழி மாதம் முழுவதும் தினசரி விடியற் காலை 4.30 மணியளவில் திருக்கோயில் திறக்கப்படுகிறது. சிறுவர், சிறுமியர் உட்பட பக்தர்கள் அனைவரும் விடியற்காலையில் எழுந்து பக்தி பரவசத்துடன் திருக்கோயிலுக்கு வருகை தந்து கூட்டு வழிபாடு நடத்துவது சிறப்பம்சமாகும்.

மார்கழி மாதத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகர் உற்சவமும் 10 நாட்கள் நடைபெறுகின்றது. 10ம் நாள் ஸ்ரீ நடராஜருக்கு விசேஷ அபிஷேகமும் ஆருத்ரா தரிசனமும் நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து ஸ்ரீ அம்பாளுக்கு அரைக்கட்டு உற்சவம் நடைபெறுகிறது.

விடியற்காலை திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி சொற்பொழிவும் நடைபெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தை மாத விழா

தை மாதத்தில் பொங்கல் திருநாள் மாலையில் ஸ்ரீ அம்பாளுக்கு புஷ்பாஞ்சலி விழாவும், தை மாதம் வெள்ளிக்கிழமை மாலையில் அம்பாளுக்கு ஊஞ்சல் உற்சவமும் தை மாதம் 3வது வெள்ளிக்கிழமை மாலையில் ஸ்ரீ அம்பாளுக்கு மகுடாபிஷேகமும் நடைபெறுகின்றது. அருகிலுள்ள அருள்மிகு கச்சாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு ஸ்ரீ அம்பாள் தெப்ப உற்சவத்திற்காக எழுந்தருளுவார்.

மாசி மாத விழா

மாசி மாதம் மாசி மகத்தன்று ஸ்ரீ அம்பாள் சென்னை கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தவாரி நடைபெற்று மாசி மக உற்சவம் நடைபெறுகின்றது. மாசி கிருத்திகையன்று ஸ்ரீ முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும், இரவு மயில் வாகனத்தில் ஸ்ரீ முருகப் பெருமான் வீதியுலாவும் நடைபெறுகின்றது.

பங்குனி மாத விழா

பங்குனி மாதத்தில் ஸ்ரீ அம்பாளுக்கு வசந்த நவராத்திரி விழாவும் குங்கும இலட்சார்ச்சனை விழாவும் நடைபெறுகின்றது.

"**ஒன்றே குலம் ; ஒருவனே தேவன்**" என்றார் திருமூலர். இந்த ஒருமைப்பாட்டை உணர்த்தும் வகையில் ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் சுதந்திர தினத்தன்று இத்திருக்கோயிலில் சிறப்பு வழிபாடுகளும், சமபந்தி உணவு வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன.

பொதுவாக இத்திருக்கோயிலில் நாள்தோறும் மூன்று கால பூஜைகள் நடைபெறுகின்றன.

இத்திருக்கோயிலில் வெள்ளி ரத பவனி உற்சவமும் நடைபெறுகின்றது. பக்தர்கள் கட்டணம் செலுத்தி வெள்ளி ரத பவனி உற்சவம் செய்து தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறங்காவலர்கள்

அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய அறங்காவலர்களாக திகழ்ந்து அன்னையின் அருமை பெருமைகளை குன்றிலிட்ட விளக்கென திகழச் செய்து இறைபணியாற்றி ஆன்மநேய சிரோன்மணிகளின் பேராதரவினையும் சேவார்த்திகளின் நன்மதிப்பையும் பெற்ற அறங்காவலர்கள்

பிரம்மஸ்ரீ. **S. சர்வேஸ்வரன் ஆச்சாரி**
அறங்காவலர் குழுத் தலைவர்

பிரம்மஸ்ரீ. **K. யுவராஜ் ஆச்சாரி**

பிரம்மஸ்ரீ. **EMS. மோகன் ஆச்சாரி**

பிரம்மஸ்ரீ. **J. ரமேஷ் ஆச்சாரி**

பிரம்மஸ்ரீ. **R. சுப்ரமணி ஆச்சாரி**
அறங்காவலர்கள்

ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலய விஸ்வகர்ம சேவார்த்திகள் சங்கம் அறங்காவலர்களுக்கு நடத்திய பாராட்டு விழாவில் நமது விஸ்வகர்ம ஜெகத்குரு அகில பாரத விஸ்வகர்ம பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானாச்சர்ய குருமகா சன்னிதானம் கலந்து கொண்டு அருளாசி வழங்கினார்கள்.

சுமார் 35 வருடங்களாக திருக்கோயில் சம்பந்தமான சட்ட ஆலோசனைகளை வழங்கி கோயில் நிர்வாகத்திற்கு உறுதுணையாக இருக்கும் பிரம்மஸ்ரீ எம். அக்னி, எம்.ஏ.பி.எல்., அவர்களின் தொண்டு பாராட்டத்தக்கதாகும்.

மேலும் இத்திருக்கோயிலில் ஒவ்வொரு பிரதோஷத்தின் போதும் ஸ்ரீ கமடேஸ்வரருக்கும், நந்தீஸ்வரருக்கும் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் ஆராதனை நடைபெற்று வருகிறது. 2002 ஜூன் மாதம் முதல் புதிதாக செய்யப்பட்ட ரிஷப வாகனத்தில் பிரதோஷ மூர்த்தி அலங்காரம் செய்யப்பட்டு கோயிலின் வெளிப்பிரகாரத்தை மூன்று முறை, நாதஸ்வர இன்னிசையும் தேவார திருவாசக இன்னிசையுடனும் பக்தகோடிகள் வலம் வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வத்திரு. தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாசாரியார்

விஸ்வகர்ம ஜெகத்குருவின் ஆத்ம நண்பரும், அநேக திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழாவினை செய்தவரும், சிறந்த தேவி உபாசகருமாகிய தெய்வத்திரு. தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசாரியார் குமாரர்கள் தேவியின் நித்ய பூஜை சிறப்புற நடைபெற உறுதுணையாகத் திகழ்கின்றனர்.

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்கோயிலின் சைவ ஆகம பூஜை விதிப்படி நடத்த திருமழிசை சிவத்திரு. ஈ.ஷண்முக சிவாசாரியார் அவர்களை நியமித்தனர் விஸ்வகர்ம பெருமக்கள். அவர் மிகவும் பாடுபட்டு ஸ்ரீ காளிகாம்பாளின் அருளை உலக மக்கள் அறிய வைத்தார். அவர் 1961 செப்டம்பர் 21ல் தேகவியோகம் ஆன பின் அவருடைய இளைய குமாரர் திரு. தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசாரியார் ஸ்ரீ காளிகாம்பாள் தேவியின் பூஜாகைங்கர்யத்தை மேற் கொண்டார்கள். இவர் காலத்திற்கு பிறகு, இவருடைய குமாரர்கள் தேவியின் நித்ய பூஜை சிறப்புற நடைபெற உறுதுணையாகத் திகழ்கின்றனர்.

இக்கோயிலின் திருப்பணியிலும் இதன் முன்னேற்றத்திலும் சைவத்திரு. டாக்டர். தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசாரியார் அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

குலபூஷணம் தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசாரியார் அவர்கள் இந்து தர்மத்தைக் கட்டிக் காத்து இந்து மதத்தின் வருமையை உலகறியச் செய்யும் மகத்தான பணியில் திலகமாக விளங்கினார்.

எங்கெல்லாம் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்கின்றனவோ அங்கெல்லாம் சிவாசார்யர் அவர்களைக் காணலாம். உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவர் செய்து வைக்கும் குடமுழுக்கு விழாக்கள் பலப்பல. விழாக்கள் மூலம் வரும் தொகையை காளிகாம்பாள் திருக்கோயில் திருப்பணிக்கே அளித்து வந்துள்ளார். இது யாம் அறிந்த உண்மை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளிக்கிழமைகள் தோறும் கன்னி பூஜை நடந்திடவும் கோ பூஜை, திருவிளக்கு பூஜை நடந்திடவும் ஏற்பாடு செய்ததும் சிவாசாரியார் அவர்களின் பெரு முயற்சியே. திருக்கோயில் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் சிவத்திரு. டாக்டர் தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசாரியார் ஆவார்.

அவர் தேகவியோகம் ஆனபின், அவரது இளைய செல்வராகிய தி.சா. காளிதாஸ் சிவாசாரியார் தந்தையர் ஒப்பர் மகன் என்பதற்கிணங்க காளிகாம்பாள் கோயில் வளர்ச்சியில் அறங்காவலர்களும் ஆசார்யர்களும் இணைந்து அற்புதமான மேலைக் கோபுரம் அமைத்து கும்பாபிஷேகம் நடத்தினர்.

திருக்கோயில் வளர்ச்சிக்கு 1. மூர்த்தம் 2. குருக்கள் 3. அறங்காவலர்கள் மூவரும் இணைவதுதான் சக்தி மயம். மூர்த்தம் காளிகாம்பாள் ; குருக்கள் – குரு வடிவில் – தாயைக் காட்டுவித்தல்.

அறங்காவலர் அறவழியில் நின்று ஆலயத்திற்கு சேவை செய்தல். ஆலயப் பணியே அறப்பணி ; அதற்கே தன்னை அற்பணி என்று அருட்பணி செய்தல்.

இவ்மூவகை அம்சமும் திகழ்வது சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கோயிலே ஆகும். உண்மை ; வெறும் புகழ்ச்சியில்லை !!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. திருக்கோயில் வாகனங்கள்

காமதேனு வாகனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷப வாகனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இரட்டை தலை சிம்ம வாகனம்



யானை வாகனம்



பூதகி வாகனம்

குதிரை வாகனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. பஞ்சலோக விக்ரஹங்கள்

ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயிலில் 31 பஞ்ச உலோகத் திருமேனிகள் உள்ளன. இவை அனைத்தும் தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அத்திருமேனிகள் உற்சவர் விக்ரங்களாவன :



ஸ்ரீ விநாயகர்

பெரிய நாயகி

ஸ்ரீ காளிகாம்பாள் பால நாயகியுடன்
லட்சுமி சரஸ்வதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சண்முக சுவாமி
முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன்
ஸ்ரீ நடராஜர் சிவகாமி அம்மை, ஸ்ரீ நந்திதேவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ பதஞ்சலி முனிவர்

ஸ்ரீ ஃபிருங்கி மகரிஷி

ஸ்ரீ வியாசர் பாதர்

ஸ்ரீ மாணிக்க வாசகர்

ஸ்ரீ அஸ்த்ர தேவதை
பலிபிடம்

ஸ்ரீ பள்ளியறை
அம்பாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மாகாளி

ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி

ஸ்ரீ துர்கை

ஸ்ரீ பிரதேஷ மூர்த்தி

ஸ்ரீ வீரபிரம்மங்காரு ஸ்வாமிகள்
ஸ்ரீ சித்தையா ஸ்வாமிகள்



ஸ்ரீ விஸ்வகர்மா

ஸ்ரீ காயத்திரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் வெண்கலக் கிண்ணித் தேர் வரலாறு

தேர், திருவீதி உலா வருவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் கிண்ணித் தேரின் பவனியைப் பார்த்திருக்கிறோமா ?

இந்தியாவிலேயே வேறெங்குமில்லாத புகழ் பெற்ற கிண்ணித் தேரினை அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயிலில் தான் காண முடியும்.

வெண்கல் கிண்ணித்தேர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எதற்கும் ஒரு வரலாறு உண்டு, அதைப்போல், இந்தக் கிண்ணித் தேருக்கும் வரலாறு உண்டு.

சென்னம்மன் குப்பம், மதராசி குப்பம், ஆறு குப்பம், மேல்பட்டு என்னும் பகுதிகளே இன்றுள்ள சென்னப்பட்டினம் ஆகும். சென்ன - அழகிய அம்மாள் - தாய். இச்சென்னம்மனே இன்றுள்ள காளிகாம்பாளது முதற் பெயர். இவளது பெயரால் முன்னைய சென்னை இராஜ்யமும் தலைநகரும் உண்டாயின. எச்.டி. லோவ் எழுதிய மதறாஸ் வரலாற்றில் சென்னம்மன் கோயில் மூலவரைக் கல்யாணி என்றும் கௌளியம்மன் (கௌரி) என்றும் பக்தர்கள் அழைத்தனர் என்று குறிக்கப்பட்டுள்ளது. (பார்வை Vol. III pp 388) ஆங்கிலேயர் தம் கப்பல் கட்டும் தொழிலுக்கு 1-11-1677ல் முதல்வராக இருந்த மொட்டமாரி என்பவரே தருமகர்த்தராக இக்குப்பத்துக் கோயிலைக் கவனித்து வந்தார். முத்துமாரியாச்சாரி எனவே மிகப் பொருத்தம் (தொகுதி 1, பக்கம் 382) மதறாஸ் மாதரசி குப்பமே இன்று பரி. ஜியார்ஜ் கோட்டை உள்ள இடம்.

சென்னையில் மிகப் பழைய கோயில் காளிகாம்பாள் கோயிலே என்றும் காலம் காண முடியவில்லை ; காலங் கடந்தது என்றும் சரித்திர ஆசிரியர் கூறுவர். கி.பி. 1640ல் காளத்தீஸ்வரர் கோயிலும் கி.பி. 1725ல் கச்சாலீஸ்வரர் கோயிலும் கட்டப்பட்டன.

400 ஆண்டுகளுக்கு முன்பே சீரும் சிறப்பு முற்ற ஸ்ரீ காளிகாம்பாள் கோயிலில் நடந்த பெருவிழாவில் வெண்கலக் கிண்ணித் தேர் ஓடிற்று. அயல் நாட்டினரும் இத்தேரின் ஓசை கேட்டு மயங்கினர். 24.9.1641ல் சென்னை ஆட்சி ஆங்கில ஏஜென்சியிட மிருந்தபோது வலக்கை இடக்கை ஜாதியினர் ஊர்வலம் வரும் விதிகளுக்காகப் பூசலிட்டனர். கி.பி. 1643 கிரீன் ஹில்ஸ் (Greenhills) சமாதானம் செய்தார். உடன் பாட்டால் கிண்ணித் தேர் ஓடியது.

கி.பி. 1655 வலக்கையர் இடக்கையர் அறியாமையால் சண்டையிட்டனர். ஆங்கிலேயர் இந்த இரு திறத்தாரையும் கூட்டிக் கொண்டு போய் காஞ்சி காமகோட்டத்தில் இடப்பக்கத்தில் இடக்கை ஜாதியினரையும் நிற்க வைத்து ஊர்வலத்தில் சண்டையிடக் கூடாது என உடன்படிக்கையில் கையெழுத்திடச் செய்தனர். ஸ்ரீ காஞ்சி காமாட்சியின் பேரில் ஜாதியினர் சத்தியம் செய்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
மறுபடியும் கிண்ணித் தேர் மராட்டியர் டவுனில் (முத்தியாலுப்பேட்டை, பகடாலுப்பேட்டை) உலா வந்தது (பார்வை : தொகுப்பு பக்கம் 141, 143, 420)

" They concluded asserting that from the period of Governor Pitt's administration the left hand people never have been allowed in Madras to have Pyramid Chariot adorned with Brass Cups..... for Cowlenya Pagoda (The Kalyana Temple) Vide Vol. III pp 388)

கிண்ணித் தேர்விழா, முதல் கவர்னர் பிட் நிறுத்தினார். சென்னை இரண்டாம் கவர்னர் சாண்டர்ஸ் (Sawnders) காளிகாம்பாள் கோயிலுக்கு விஜயம் செய்து 21-9-1790ல் தாமும் தேரின் வடத்தைக் கையால் பற்றி இழுத்து பக்தர்களோடு பரவசப்பட்டார். அம்பாள் கிண்ணித்தேரில் வீதியுலா கண்கொள்ளாக் காட்சியாகும். அடியேனும் சிறு வயதில் கண்டும் கேட்டும் களித்துள்ளேன. வெண்கலத் தட்டுகளின் ஓசையும் ஒலியும் பக்தர்களை மெய்மறக்கச் செய்யும் என்பது உண்மை ; வெறும் புகழ்ச்சி இல்லை.

இந்தியாவில் மிகப்பெரிய வெண்கலக் கிண்ணித் தேர் சென்னபுரி ஸ்ரீகாளிகாம்பாள் கோயிலில் உள்ளதே, கடலூரிலும் பாண்டியன் சேரியிலும் (புதுச்சேரி) கிண்ணித் தேர்கள் உள்ளது. இத்தேரினை ஸ்ரீ சக்கர ரதம் என்பர் பெரியோர். கி.பி. பதினோறாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் தனி அம்மன் கோயில்கள் உண்டாயின. பின்னரே சாமி, அம்மன் கோயில்கள் சிவசக்தி தத்துவம் கண்டன. காமேஸ்வரர் அல்லது கமடேஸ்வரர் (சிவன்) பிரகாசத்தையும் (PRAKASH) காமேஸ்வரி, சிவகாமி, காமகோடி, வனிதா, திரிபுரசுந்தரி விமர்ஸா (VIMARSA) இவை இரண்டினையும் சேர்த்தே ஸ்ரீ சக்கரம் தோன்றியது. ஸ்ரீ சக்கரம் இரு வகை முக்கோணங்களையுடையது.

ஒரு வகை ஆண்பால் (சிவன்) குறிக்கும் நான்கு முக்கோணங்களாம். மற்றொரு வகை பெண்பால் குறிக்கும் ஐந்து முக்கோணங்களாம். இவைகளின் உச்சியே பிந்து ஸ்தானம் எனப்படும். அந்த நடுவண் வீற்றிருப்பவர்களே என்றும் பிரியாத காமேஸ்வரர் வனிதா எனப்படுவோர். இத்தகைய ஸ்ரீ சக்கரத்தை ஆதிசங்கரர் முக்கிய சக்தி ஆலயங்களில் ஸ்தாபித்தார். காஞ்சி காமாட்சி முன்னர், குற்றாலத்தில் ஸ்ரீ சங்கர பீடம் ஆவுடையார் கோயில் மூலத்தில், சென்னை காளிகாம்பாள் கோயில் காளியம்மன் முன்னர் இன்றும் அவைகளைக் காணலாம். தேவியின் ஸ்ரீ சக்கரத்தைக் குறிப்பதே வெண்கலக் கிண்ணித்தேர் என அறிக. பாழ்பட்டு வெளியில் உலா வாராதிருந்த ஸ்ரீ சக்கர ரதத்தைப் பழுது பார்க்க 9-6-1987ல் விழா காணும் ஸ்ரீமத் கருமாரி தாசர் இராமதாசரையும் ஸ்ரீ சண்முக சாம்பு சிவாசாரியையும் நிர்வாக தரும கர்த்தர் பிரம்மஸ்ரீ டி.எஸ். ராஜப்பா அவர்களையும் பக்தகோடிகள் வாழ்த்தியருள வேண்டுகின்றேன். தரிசிக்க வருக ! கனவு நனவானது !!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிண்ணித் தேரின் பரிமாணங்கள் - நிர்மாண விவரங்கள்

ஆண்டுதோறும் பிரம்மோற்சவத்தின்போது 7ம் நாளன்று காலையில் இரதோற்சவம் பூந்தேராகவும் 9ம் நாள் இரவில் கிண்ணித்தேர் என்னும் அற்புத ஸ்ரீ சக்ர ரதம். வெண்கலக் கிண்ணிகளால் அலங்கரிக்கப்பட்டு, அருள்மிகு காளிகாம்பாள் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருந்து வந்தது என்று ஆங்கிலேயே வரலாற்று ஆசிரியர் திரு. எச்.டி. லவ் என்பவர் தமது சென்னை நகர வரலாறு என்னும் நூலில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

15ம் நூற்றாண்டுகளுக்கு முன்பே ஸ்தாபிதமான இத்தொன்மை வாய்ந்த விஸ்வகர்ம சமூகத்தினரின் திருக்கோயிலுக்கு ஆண்டுதோறும் பிரம்ம உற்சவம் நடைபெறும்போது பகலில் பூந்தேரிலும், இரவில் கிண்ணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ சக்ர ரதத்தில் பவனி செல்லும் ரதமானது காலத்தால் பழுதுபட்டு 1940க்கு பிறகு தடைப்பட்டு விட்டது.

சான்றோர்களின் முயற்சியால் புதிய ரதம் ஒன்று செய்யப்பட்டு ஸ்ரீ பிரபவ வருடம் வைகாசி மாதம் முதல் ஸ்ரீ அம்பாள் பவனி வருகிறாள்.

1. தொன்மையாக இருந்த இரதத்தின் உயரம் 33 அடி, அகலம் 12½ அடி, புதிதாக செய்யப்பட்ட தேரின் உயரம் 22 அடி, அகலம் 10 ½ அடி, 4 சக்கரங்கள் கொண்டது.

2. கும்ப கலசம் மற்றும் மூன்று நிலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. தேரின் கலசம் தங்க முலாம் பூசியுது. பழைய தேரினுடையது. குடை வெள்ளியினால் ஆனது.

3. குண்டலி ஸ்தானம், நாடி, இருதய ஸ்தானம், கண்ட ஸ்தானம், கும்ப பீடம், ஸ்ரீ அம்பாள் பீடம், மூன்றடுக்கு விமான நிலைகள் யாவும் தேக்கு மரத்தால் செய்யப்பட்டுள்ளது. 201 - 766 கன அடி தேக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் கிரயம் 1,04,794,85 ஆகின்றது.

4. தேர் சக்கரங்களுக்கும் இருசு அச்சு மரங்களுக்கும் வாகை மரம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. கிரயம் ரூ. 13,745,55.

5. தேரின் இரும்பு இருசுகளின் நீளம் 10 ½ அடி, கனம் 5 அங்குலம்.

6. தேர் மையங்கள் 40 செம்மரத்தாலும் மேல் நிலைகள் தேக்கு மரச் சட்டங்களால் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 150 கனஅடி மரம் அடங்கியுள்ளது.

7. இருசுகள், இரும்பு தளவாடங்கள், புஷ்கள், இரும்பு பட்டைகள், போல்ட் ஆணிகள் முதலானவைக்கு விலை மதிப்பு ரூ. 27,075.80.

8. தேரில் ஸ்ரீ அம்பாள் மற்ற தெய்வங்களின் அவதார திரு உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கூலி வகைக்கு ரூ. 70,000/-.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. வெண்கல கிண்ணிகள் பழைய தேரினுடையது. நல்ல நிலையிலுள்ளது. 800 கிண்ணிகள்தான் புதிய தேரில் பொருத்தப்பட்டுள்ளது.

இத்தேரினை அமைக்க 1985ல் அறநிலையத் துறை மதிப்பீட்டின் அங்கீகாரம் ரூ. 1,70,000 /- ஆனால் தற்பொழுதுள்ள அக விலையினாலும் கூலிகள், உபகரணங்கள் இரும்பு மரம் உயர்வினாலும் இதன் மதிப்பீடு ரூ. 2,25,000 /-க்கு மேல் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தேரினை காலம் சென்ற திருவண்ணாமலை ஸ்தபதியார் டி சண்முகாச்சாரியார் அவர்களால் எஸ்.டி.மேட்டுகள் வரைபடங்கள் அமைக்கப்பட்டு பிறகு சுவாமிமலை ஸ்தபதிகள் பிரம்மஸ்ரீ நடராஜ ஸ்தபதி பிரம்மஸ்ரீ கே. வேலு ஸ்தபதியின் சீறிய முயற்சியால் நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சக்ரத் தேர்

தேர் திருவிழாவில் ஓர் சமுதாயத் தத்துவம் அடங்கியுள்ளது தேரையிழுக்க ஒருவரால் முடியாது. எனவே, பலருடைய ஒத்துழைப்பும் முழுமையாக தேவை. சும்மா கையை வைத்து இழுத்தால் தேர் நகராது. பலரும் முழுமையாக செயல்பட்டாலும் பலரும் பல திசையில் இழுத்தாலும் தேர் நகராது. ஒருமுகப்பட்டு ஒரே திசையில் இழுக்க வேண்டும். ஆக அப்படி இழுத்தாலும் ஒரு நொடிப் பொழுதில் நிலையை அடைவதில்லை. காலம் தேவைப்படுகின்றது. அதுபோலவே, சமுதாயம் ஒற்றுமையுடன் செயல் படவும், ஒற்றுமை நிலவவும் ஆலயங்களில் திருத்தேர் விழா கொண்டாடினர்.

சென்னபுரி, ஸ்ரீ காளிகாம்பாள் ஸ்ரீ சக்ரத் தேர் மிகவும் அழகும் சக்தியும் வாய்ந்த திருத்தேராக காட்சியளிக்கின்றது. பிரம்மோற்சவத்தில் இரவில் ஒலிக்கும் வெண்கல ஓசை ஓம் ஓம் என்ற பிரணவ ஓசையை நம் செவியில் இனிய இசையாக ஒலிக்கும் என்பதை நேரில் கண்டவர் கூறுவர்.

தேரில் முப்பத்து முக்கோடி தேவர்களும், யட்சர்களும் கின்னரர்களும், கந்தருவர்களும் வசிப்பார்கள். உருத்திர கணிகைகளும், ரிஷிகளும் வசிப்பார்கள். இவர்களின் சிற்பங்கள் தேரின் அடிப்பாகத்தினைச் சுற்றிலும் இருக்கும். மேலும், பிரம்மா, விஷ்ணு, பரமசிவன், இந்திரன், சூரியன் இவர்கள் அதிதேவதைகளாக இருப்பர். தேரின் அமைப்பு அண்டபிண்டத்திற்குச் சமானம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"விராட் விஸ்வ சொரூபமே எட்டு அடுக்காகும்."



உச்சியிலிருக்கும் கலசம் சோடசாந்தம் ; அதற்கடுத்த கீழடுக்கு துவாத சாந்தம் ; அதற்கு அடுத்து கீழடுக்கு மத்தக ஸ்தானம் ; அடுத்த அடுக்கு புருவ மத்திய ஸ்தானம் ; நடுவில் தாங்கும் குத்துக் கால்கள் முன் மூன்று துளைகள் மூன்று கண்கள் பின்புறம் உள்ளது. சிகையும், இட, வலக் காதுகளும் ஆகும். இறைவன் எழுந்தருளும் கேடய பீடம் முகம். குதிரைகள், சூரிய சந்திர கலைகள் சாரதி அக்னி கனல் இவை நாசி (மூக்கு) ஆகும். அடுத்த கீழ் அடுக்கு கண்ட ஸ்தானம். அதையடுத்த கீழடுக்கு இருதய ஸ்தானம். அதற்கடுத்தது நாபி ஸ்தானம் ; அதை அடுத்து குண்டலி ஸ்தானம் ; சக்கரங்கள் தச வாயுக்கள் ; இறைவி இதற்கு கர்த்தா தான் ஒருத்தியே என்று உணர்த்தி இவ்வாறு அமைந்த பிண்டதத்வ சரீரமாகிய இரதத்தில் தச வாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி அசைவற்ற மனதை உந்தி குண்டலினியிலிருந்து நாபிக்கும், நாபியிலிருந்து கண்டத்திற்கும் அதிலிருந்து வாய்க்கும் முறையே இரத குதிரையாம் நாசிக்கும் அங்கிருந்து கண்கள் வழியாகவும் நடு வழியாகவும் மேல் நோக்கி ஆறாம் அடுக்காகிய புருவத்திற்கும் ஏற்றி வயப்பட்டு சும்மாயிருந்த படி இருக்கும். நித்ய சுகியாய் இருந்திடல் வேண்டு மென்றுலயக்கிரமத்தைக் காட்டுகிறது.

மேலும், தேரானது திரிபுராதிகளை சிவன் சிரித்து எரித்து ஆன்ம கோடிகளைக் காப்பாற்றிய காத்தல் தொழிலுக்கு அறிகுறியாகவுள்ளது. இவ்வளவு தத்துவமுள்ள தேரில் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் வருவதை தரிசிப்பது அஷ்டலட்சுமி கடாட்சமும் கோடி புண்ணியங்களும் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. ஸ்ரீ சக்ர மஹா மேரு விளக்கம்

அம்பிகையின் அருவுருவ நிலையான மேரு ஸ்ரீ சக்ரத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. புருஷ ரூப சக்தி 32ம் சக்தி ரூப பகுதி 32ம் ஒன்றேடொன்று இணைவதால்.

43 முக்கோணமும், பிந்துவும் வெளியில் தெரிகின்றது. மற்றகோணங்கள் உள்ளே மறைந்து விடுகின்றது.

இந்த 43 முக்கோணத்தில் 64 தத்துவங்கள் அடங்கியுள்ளது. இதன் அடிப்படையிலேயே பரதக் கலையில் 64 அபிநயமும் இசையில் 64 ராகமும் சிற்ப சாஸ்திரத்தில் 64 பாவமும் தேரின் கால்கள் 64ம் அம்பிகை அமரும் தாமரை மலரின் 64 இதழ்களும் நம் பெண்டிர் அணியும் திருமாங்கல்யத்தில் 64 துண்டுகள் இணைத்தலும் வழக்கில் உள்ளது. இரத்தினத்திலும் 64 பட்டை தீட்டப்பட்டதே இதன் அடிப்படையில் ஆகும்.

மேருவின் மையப் பகுதியில் பிரணவ ரூபத்தில் அம்பிகை உள்ளாள். மேரு அர்த்த மேரு, மகா மேரு என இரு வகைப்படும்.

அர்த்த மேரு என்றால் பாதி அல்லது அகலத்தில் பாதி உயரமாகக் கொண்டு அமைப்பதாகும். இதில் இரு வகையுண்டு. ஒன்று அகலத்தில் பாதி உயரம் வரை 43 முக்கோணங்களையும் படிப்படியாக அமைத்தல், மற்றென்று அகலத்தில் பாதியளவு உயரம் வரை வைத்து பின் மேற் பகுதியில் ஸ்ரீ சக்ரத்தினை வரைவதாகும்.

அகலமும் உயரமும் ஒரே அளவில் அமைந்து விளங்குவது ஸ்ரீ மகா மேரு ஆகும். கருணைக் கடலாகிய அன்னையின் அருவுருவமே மேரு ஆகும். இதனை முறைப்படி தயாரித்து வழிபடுவதன் மூலம் சகல நன்மைகளையும் பெறலாம். இகத்தில் சுகமும் பரத்தில் அமைதியும் பெறலாம்.

இத்தகைய பெருமை வாய்க்கப் பெற்ற ஸ்ரீ சக்ரத்தை ஆதிசங்கரர் முக்கிய சக்தி ஆலயங்களில் ஸ்தாபித்தார்.

காஞ்சி காமாட்சியம்மன் பாதத்தில், குற்றாலத்தில் ஸ்ரீ சங்கர மடத்தில், ஆவுடையார் கோயில் மூல ஸ்தானத்தில் சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய மூல ஸ்தானத்தில் இன்றும் அவைகளைக் காணலாம்.

ஸ்ரீ மஹா மேரு

கிண்ணித் தேர் தவிர, ஸ்ரீ அம்பாள் வெளிப்பிரகார மண்டபத்தில் பிரதக்ஷணம் வர 125 கிலோ எடையுள்ள வெள்ளித்தேரில் உள்ள மரங்கள் பழுதடைந்ததால் 1.10.2020-ல் தற்போது பதவியேற்ற புதிய அறங்காவலர்கள் முயற்சியினால் புதிய உரிய அனுமதியுடன் செய்யப்பட உள்ளது. வெள்ளித் தேர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. சத்ரபதி சிவாஜி வணங்கிய காளிகாம்பாள்

சத்ரபதி சிவாஜி சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானத்திற்கு வந்து அம்பாளை வழிபட்டார் என்பது வரலாறு. அவ்வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு முன்பு நாம் சற்று வீர சிவாஜியைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

வீர சிவாஜி 6.4.1627 ஆண்டு பிறந்தார். சிவாஜியின் தந்தை ஷாஜி போன்சலே, பீஜப்பூர் கல்தானிடம் இராணுவ அலுவலராகப் பணிபுரிந்தார். தாய் ஜீஜாபாய், சிறுவன் சிவாஜிக்கு அக்கால இந்து வீரர்களின் கதைகளைக் கூறினார். அந்த வீர வராறுகள் சிவாஜியின் மனதில் ஆழப் பதிந்தன. அதுவே பிற்காலத்தில் அவர் மாவீரனாக விளங்குவதற்கு அடித்தளம் அமைத்தது.

வீர வரலாறு

சிவாஜி மகாராஷ்டரர்களிடம் தேசிய உணர்வை உண்டாக்கினார். மொகலாயர் வசமிருந்த கோட்டைகளைக் கைப்பற்றி, வெற்றி வாகை சூடினார். மகாராஷ்டிர அரசை நிறுவி, சத்ரபதி என்னும் பட்டம் வெற்றார். மாவீரன் சிவாஜி 3.4.1680ல் மறைந்தார். அவர் மறைந்தாலும் அவருடைய வீர வரலாறு இன்றைக்கும் பேசப்படுகிறது.

சிவாஜி அரச சபையில் ஓர்நாள், வீரர்களே ! நம் சுதந்தர நாட்டைக் காணப் பல அக்கிரமங்களையும், அநியாயங்களையும் தியாகங்களையும் அம்பாள் பவானி ஆணையால் நான் செய்திருப்பேன். நான் தெரிந்ததும் தெரியாமலும் செய்யும் பிழையும் பாவமே. அதனையொழிக்க கர்நாடகத்திற்குப் புறப்படுகின்றேன். அங்குள்ள திருப்பாச்சூர், திருவாரூர், இராம்சுவர் (இராமேஸ்வரம்) முதலிய புண்ணியத் தலங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிப்படப் போகின்றேன். நான் சுமக்கும் பாவ மூட்டை அன்றே தொலையும் என்றார் சிவாஜி மன்னர் (பார்வை : அயல்நாட்டார் எழுதிய சிவாஜி வரலாறு, பக். 155)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சியிலிருந்து சென்னைக் காளிகாம்பாளை நடுநாயகமாகக் கொண்டு விளங்கிய மராட்டா டவுனில் தங்கினார். கோயிலைச் சுற்றி வாழ்ந்த விசுவகருமரும், பேரிச் செட்டிமாரும் தத்தம் வீடுகளையும் தோட்டங்களையும் நிலங்களையும் காலி செய்து வீரர்களுக்கு வசதி செய்து கொடுத்தனர்.

சென்னை வந்தார்

சென்னம்மன் குப்பத்தில் (மராட்டா டவுன்) வாழ்ந்து கொண்டு ஆங்கிலேயரது பிரதம தச்சராக இருந்த பிரம்மஸ்ரீ முத்துமாரி ஆச்சாரியாரைக் கண்டார் (Muttamari Carpenter in 1677, பார்வை : எச்.டி லவ் இயற்றிய பூர்வீக வரலாறு தொகுப்பு 1, பக். 382) இத்தச்சரை மொட்டமாரி என்றும் கூறுவர். மாவீரன் சத்ரபதி சிவாஜி தென்னகத்திற்கு வருகை தந்தார். 1677ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ம் தேதி, அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயிலுக்கு வந்து, காளிகாம்பாளை வழிபட்டுச் சென்று, வெற்றி வாகை சூடியதாக வரலாறு நமக்குச் சான்று பகர்கின்றது.



ஸ்ரீ காளிகாம்பாள் சன்னதியில் ஸ்ரீ வீர சிவாஜி மகாகவி பாரதியார்

சென்னைக்கு வருகை தந்து மீண்டும் மகாராஷ்டிரம் செல்லும் போது அரண்மனைக்கார தெருவில் முகாமிட்டு ஓய்வு கொள்ளும் போது ஸ்ரீ காளிகாம்பாளை தரிசனம் செய்துவிட்டு சென்ற பிறகுதான் மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியாக முடிசூட்டிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாஜி மன்னர் தேவி உபாசகர். அம்மா பவானியே அவரையாட் கொண்டு நடத்தினாள். அவர் சிவசக்தியை நம்பியே எதையும் செய்தார். தேவியைக் கேட்டே எதையும் செய்வது வழக்கம். அவளும் அவரது இதயவொலியாக உணர்த்தினாள். ஸ்ரீ தேவிக்குப் படைத்த வெண்ணெயில் வெந்த வெண் பொங்கலை நடுப்பகலில் உண்பது வழக்கம். ஒரே வேளை உண்ட சிவாஜி ஒரு யோகியே. அவர் இந்து சாம்ராஜ்யத்தை சிவையின் அருளாலும் பக்தியாலும் ஸ்தாபித்தார் என்பது உண்மை ; வெறும் புகழ்ச்சி இல்லை.

கி.பி. 1666ல் மகாராஷ்டிரத்தை ஸ்தாபித்த பின்னர் சிவாஜி ராஜா தம் தலைநகரான ரெய்ச்சூருக்குத் திரும்பினார். மக்கள் சுதந்திரத்துடன் வாழ வழி வகுத்தார். இன்று காணும் மெட்ரோபாலீஸ் என்னும் நகரமாக அது விளங்கியது.

அருள் பெற்றவர்கள் (வருகை தந்தவர்கள்)

இந்த ஆலயத்திற்கு ஷண்மத போதகர் ஆதிசங்கரர், அகில பாரத விஸ்வகர்ம பீடாதிபதி ஸ்ரீ சிவசண்முக ஞானாச்சரிய சுவாமிகள், காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர ஸ்வாமிகள், சிருங்கேரி சாரதா பீடாதிபதி சரஸ்வதி ஸ்வாமிகள், விஸ்வகுல தாரகா ஸ்ரீ தெய்வ சிகாமணியார், சிற்பகலாநிதி கௌரி சங்கர் ஸ்தபதியார். வாஸ்து வேதி வை. கணபதி ஸ்பதியார், சில்பகுரு காசிலிங்க ஸ்பதியார், சக்தி உபாசகர் இராஜகோபாலாச்சாரியார், சிவயோகி மண்ணடி சண்முகாச்சாரியார், அம்பாள் சேவகர் வாசுதேவ ஆச்சாரியார், விஸ்வக்ஞ ஸ்ரீவித்யா உபாசகர் சக்தி சம்பந்தனார், மகாமேரு தியான நிலையம் ஸ்ரீ முருகபூஷணம் சுவாமிகள் போன்ற மகான்களும் மாவீரன் சத்ரபதி வீர சிவாஜி போன்ற மன்னர்களும் வருகை தந்து பயன்பெற்று வந்துள்ளனர்.

நாம் தமிழ்நாட்டில் பிறந்ததற்கும், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளதற்கும், சைவ சமயத்தில் ஈடுபாடு பெற்றுள்ளதற்கும் சாத்திர, தோத்திர நூல்களைப் படித்துப்பயன் பெறுவதற்கும் முற்பிறவிகளில் மாதவம் செய்திருக்கிறோம். அதற்காக நாம் சிவசக்திக்கு வணக்கமும் வாழ்த்தும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. அன்னையை பாடிய பரவிய அருளாளர்கள்

திருஅருட் பிரகாச வள்ளலார்

சுகமே நிரம்பப் பெருங்கருணைத்
தொட்டிலிட்டே யெனை யமர்த்தி
அகமே விளங்கத் திருவருளாள்
அமுதம் அளித்தே யனைத்தருளி
முகமே மலர்த்திச் சித்தி நிலை
முழுதுங் கொடுத்து மூவாமற்
சுகமேல் இருக்கப் பணித்தாயே
தாயே ! என்னைத் தந்தாயே !

– வள்ளலார்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

காளிகாம்பாள் கூத்து எவ்வாறு நடக்கிறது என்பதை உணர்ச்சியோடு பாடியிருக்கிறார்.

ஸ்ரீ காளி பாடல்

யாது மாகி நின்றாய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் காளி
தெய்வ லீலை யன்றோ
பூத மைந்தும் ஆனாய் காளி
பொறிக ளைந்தும் ஆனாய்
போத மாகி நின்றாய் காளி
பொறியை விஞ்சி நின்றாய்

இன்ப மாகி விட்டாய் காளி
என்னுள் புகுந்தாய்
பின்பு நின்னை யல்லாம் காளி
பிறிது நானும் உண்டோ
அன்பளித்து விட்டாய் காளி
ஆண்மை தந்துவிட்டாய்
துன்பம் நீக்கிவிட்டாய் காளி
தொல்லை போக்கி விட்டாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதி சக்தி தாயே என்மீது
அருள் புரிந்து காப்பாய்
எந்த நாளும் நின்மேல் தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
காளிமீது நெஞ்சம் என்றும்
கலந்து நிற்க வேண்டும்
பின்பு நின்னை யல்லால் காளி
பிறிது நானும் உண்டோ ?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

மகாகவி பாரதியாரின் விருப்பப்படி புரட்சிக் கவிஞர் முதன் முதலில் சக்தியை வியந்து பாடிய பாடல். இந்தப் பாடல் பல பத்திரிகைகளில் பல மொழிகளில் வெளி வந்துள்ளது. இந்தப் பாட்டின் மூலம் பாரதிதாசன் தமிழ்நாடடிற்கு அறிமுகமானார்.

எங்கெங்குக் காணினும் சக்தியடா – தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் – அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா – ஒரு
கங்குலில் ஏழுமுகிலனமும் – வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ ? – எனில்
மங்கைநகைத்த ஒலி எனலாம் – அவள்
தந்த நகையங்கு மின்னுதடா

காளை ஒருவன் கவிச்சுவையைக் கரை
காண நினைத்த முழு நினைப்பில் அன்னை
தோள சைத்தங்கு நடம்புரிவாள் – அவள்
தொல்லறிவாளர் திறம் பெறுவாள் – ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே – இந்த
வையமுழுவதும் துண்டு செய்வேன் – என
நீள இடையின்றி நீ நினைத்தால் – அம்மை
நேர்ப்படுவாள் உன்றன் தோளினிலே !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று புரட்சிக் கவிஞர் சக்தியை வியந்துபாடி சக்தியை வழிபட்ட பின்னரே சக்தி பிறந்தது பாடலில், சமுதாயத்தில் தேசத்தில் தேசப்பற்றில் மூட நம்பிக்கையை சாடுவதில் சமத்துவம் சகோதரத்துவம் வளர்ப்பதில் சக்தி அறிவு சக்தி, ஆன்ம சக்தி, ஆற்றல் சக்தி ஆகியவைப் பெற்று மனிதநேயம் பெறுவதில் தலைசிறந்து நின்றார் பாரதிதாசன்.

துர்க்கைச் சித்தர்

துர்க்கைச் சித்தர் அம்பிகை வழிபாட்டில் தற்காலத்தில் சிறந்த சாக்த உபாசகராய் வாழ்ந்து வழிகாட்டுகிறார்.

துர்க்கையென நிற்பவளே துந்துயியில் மகிழ்பவளே
துயரத்தைத் துடைப்பவளே துணைமகளே ஸ்ரீங்காரி
அர்ச்சனையில் அகமகிழும் அரியவளே ஐம்தேவி
பர்வதத்துப் பனிமகளே பயமோட்டும் சிங்காரி.

என்று கவசப் பாடலில் உள்ளம் நெகிழப் போற்றுகின்றார் துர்க்கைச் சித்தர்.

பைந்தமிழரசு - ஸ்ரீ கருமாரி தாசர்

அகரமாதி அக்கரத்த ளாதி நாத வாலையாள்
அறிவுமருளும் அன்பும் வாய்ந்த அழகுதேவி புவனையாள்
உகர கரத்தில் சூலமேந்தி உலகைக் காக்கும் நாரணி
உம்பர் முனிவர் உவணர் யோகர் உவந்து வாழ்த்தும் பூரணி
மகர பதத்தி மரகதத்தி மாலினினையின் வருகவே
மயிலன் கரியன் முத்தன் காந்தன் வாழ்த்துதேவ வருகவே
தகர குழலி தமிழன் எழிலி தத்து வித்தி வருகவே
தமிழளிக்குங் காளிகாம்பாள் கருணைக்
கடலே வருக வருகவே !!

தற்காலத்தில் சிறந்த சக்தி உபாசகராக வாழ்ந்து வருகிறார்.

உள்ளம் உருகுதய்யா

அன்னை ஸ்ரீ ஆண்டவன் பிச்சி அவர்களால் 1952ம் ஆண்டு வடகதிர்காமப் பெருமான் முன்பு அவனருள் உந்துதலால் இதே விசாக மண்டபத்தில் பாடிய அருள் பாட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளம் உருகுதடா முருகா உன்னடி காண்கையிலே
அள்ளி அணைத்திடவே எனக்குள் ஆசை பெருகுதடா
பாடிப் பரவசமாய் உன்னையே பார்த்திடத் தோணுதடா
ஆடும் மயிலேறி முருகா ஓடி வருவாயடா
பாதமலர் மணத்தால் மனதில் பக்தி பெருகுதடா
நாதன் திருவருளாள் எனக்குள் நாலும் விளங்குதடா
ஆறுதிருமுகமும் அருளை வாரி வழங்குதடா
வீறுமுகம் தோளும் கடம்பும் வெற்றி முழக்குதடா
பாசம் அகன்றதடா உந்தன் மேல் ஆசை வளருதடா
ஈசன் திருமகனே முருகா ஈனம் மறைந்ததடா
பற்றுதல் அற்றதடா உன்னடி பற்றுதல் உற்றதடா
அற்றது என் பிறவி இனிமேல் ஆள்வதுன் பாரமடா
உன்னடியே பணிந்தேன் முருகா என்வினை தீர்ந்ததடா
என்னகத்துள் இருந்து முருகா உன்னுரு காட்டிடடா
பந்தம் அகன்றதடா (முருகா) உனக்கு சொந்தம் தானேனடா
கந்தன் என்ற போதே கலங்கி அந்தகன் போனேனடா
அன்பில் உருகுதடா மனதில் ஆர்வம் பெருகுதடா
என்பாவம் தீர்ந்ததடா இனியோர் துன்பம் இல்லையடா
காதல் பெருகுதடா முருகா கண்களி கூறுதடா
சாதல் பிறத்தலெல்லாங் கடந்தேன் சாமி நீயானேனடா
கண்கண்ட தெய்வமடா நீ இந்த கலியுக வரதனடா
வெண்ணென்றிகழாமல் எனக்குப் பேரின்பம் தந்தாயடா
வாழ்த்திப் பணிந்திடுவேன் உன்னையே வந்தனை செய்திடுவேன்
தாழ்த்தி உயரவைத்தாய் உனது தண்ணருள் என்ன செய்வேன்
கண்ணின் கருமணியே முருகா கற்கண்டின் இன்சுவையே
உண்ணத் தெவிட்டாத கனியே உம்பர் தங்கள் அமுதே
வெற்றி வடிவேலும் மயிலும் வேதனை தீர்த்ததடா
பற்றினேன் பாதமலர் அடிமை பாவங்கள் போனதடா
கண்ணில் அருள் ஒளியும் உனது ஷண்முகத்தின் தயையும்
எண்ணிய போதினிலே என்மனப் புண்ணாறிப் போனதடா
வாரி அணைத்திடுவேன் அகத்தில் வாசமலர் அணிவேன்
யாரிணையா மெனக்கு உனது அடியார்க் கடிமையடா
பன்னிரு தோள்களிலும் உனக்கு பாமாலை சூட்டிடுவேன்
என்னிரு கண்மணியே முருகா என்னிடம் வந்திடா
உள்ளக் கமலத்திலே உனக்கு ஊஞ்சலிட்டேன் முருகா
வள்ளியுடன் வருவாய் உன்னையே மெள்ள நான் ஆட்டிடுவேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காளிகாம்பாள் அகவற் பா

ஆதிசக்தியாய் அமர்ந்த அம்பிகையே
சோதி மயமாய் தோன்றிய பொருளே
பாதி மதியணிந்த பரமனை வழிபட
மாதுநீ வந்தாய் மாநிலத் தனிலே
பராபரியான பார்வதி உமையே
சராசர மனைத்துந் தானீன்றவளே
முக்கோணத்தின் முதலாயவளே
ஷட்கோணத்திற் தங்கிய பொருளே
மாயனுக்கிளைய மனோன்மணித் தாயே
நீயே வந்து நிரந்தமாக

வங்கக் கடற்கரை வந்தமர்ந்தவளே
சிங்காரபுரி சென்னை மாநகரில்
திருவருள் வைத்துத் தெரிசணங் கொடுத்தே
அருமகவென்றுள்ளன் போடு காப்பாய்
ஆதாரமாக அவனியிற் சிறந்த
தொண்டை நாட்டில் சுகித்திருப்பவளே
புவனையாய் நின்று புத்திகளுரைத்துக்
கவனமா யென்னைக் காத்தருள் தாயே
திரிபுரையாக திடமெனக் குறைப்பாய்
திருந்த யௌவனையாற் தீனரட்சகியே

கௌமாரியாகிக் கழிவெறச் செய்வாய்
சௌபாக்ய வதியே சாமளா தேவி
சாகா மருந்து தயவாவளித்தே
ஏகாந்த யோகம் என்றனக் களிப்பாய்
சாலோகத்தில் தானாகி நின்று
சாமீபத்தில் தனித் திருந்தருளிச்
சாரூபத்திற் தங்கியே யெனக்குச்
சாயுச்சிய பதவி தந்திடுந் தாயே
ஐங்கோணத்து அறிவெனக் கோதிப்
பைங்கொடியாளே பக்தனைக் காப்பாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகாட்சரத்தில் இருக்கின்ற தாயே
யோகா சனத்தில் உண்மைய தருள்வாய்
வேலனை யீன்ற விளக்கொளி யாளே
பாலனா மென்னை பாதுகாத்திடுவாய்
உன்றனை நம்பிய உன்னடி யேன்நான்
என்றன் முன்வந்தருள் ஏக நாயகி
சுருதி மெய்ஞ்ஞான சூட்சம மெனக்குப்
பரிதிபோல் வந்து பாதுகாத்திடுவாய்
நலம்பெற வுரைத்திடு நாராயணியே
குலமது செழித்திட குழந்தைக ளளிப்பாய்

மயிலே மாகாளி மைந்தன் மகிழும்
குயிலே யுனது குரைகழல் பணிந்தேன்
மாதர் மோகத்தால் மயங்கிடும் புத்தியை
பாதம் மேல் வைக்க நல் வரமருள்வாய்
ஆரண முடியிலமர்ந்த கதிர்காமனை
சூர சம்ஹாரனைத் துணைவரச் செய்வாய்
தாயே வுமையே தலைமைப் பதியே
நாயே னுன்னை நம்பினே னம்மணி
பிருங்கிக்கு ஞானம் தீர்க்கமா யளித்த
தேவியும் நீயே சென்னைபுரி நங்காய்

அண்ணன் கமடேஸ்வரன் அருகிருப்பவளே
விண்ணவர் போற்றும் வேத நாயகியே
அங்கயற்கண்ணி அழகாம் பிகையே
எங்கும் நிறைந்த ஏகாம் பரியே
மாசிமாத மக நட்சத்திரத்தில்
மாகடலாடும் மங்கையர்க் கரசியே
மிக்க சந்தோஷமாய் விளையாடி நின்ற
தக்கன் மகளாம் தட்சாயணியே
அன்னப்பேடென அமர்ந்த வித்யேஸ்வரி
உன்னது திருவடி உகந்தெனக் களிப்பாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூற்றை யுதைத்த கொற்றவைத் தாயே
போற்றி நின்னடி தொழ புரிவாய் அருளே
பெற்றதாய் நீயே பிள்ளை நானுனக்கே
உற்றதை சொன்னேன் உன் சமூகத்தில்
மோசஞ் செய்யும் மோகினிப் பேயை
நாசஞ் செய்திடு நாராயணியே
சூலி கபாலி சுமங்கலி நீலி
சீலி யனுகூலி நித்ய கல்யாணி
காமனை யெரித்த கனற் கண்ணாளே
காமேஸ்வரியே காளிகாம்பாளே.

சொல்வளச் செல்வன் அகவல் கேட்டு
மாழாதெனக் குமகிழ்வு தந்தருளி
தவறுத விருக்கிற் தாயே பொறுத்து
எவருமதிக்க என்முன் வந்தருள் வாய்
கடைக் கண்ணோக்கால் கருணை புரிந்து
அடைக்கலம் புகுந்தேன் அபயஸ்த மருள்வாய்
வீரசிவாஜிக்கு வெற்றியைத் தந்தாய்
பாரதி தனக்கு பாவினைக் கொடுத்தாய்
ஆண்டவன் பிச்சிக்கு அருளொளி சுரந்தாய்
சாம்பசிவாச்சாரியார் சதுர்மறை அறிந்தாய்

சாதுராம் சுவாமிகள் திருப்புகழ் அணிந்தாய்
வாழ்க ! வாழ்க ! கருணைக்கடலே
வாழ்க ! வாழ்க ! காளிகாம்பாளே !
நெய்தல் நிலக்காமாட்சி நித்தம் வாழ்க !
நெடியோன் தங்காய் நீள்நிலம் புரக்க !
சடையோன் ஆடும் திருநடனம் காணும்
சடாட்சரி தாயே வாழ்க பல்லாண்டு !
சென்னை ஸ்ரீ காளிகாம்பாளே
வாழ்க பல்லாண்டு வாழி ! வாழி !!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காளிகாம்பாள் அந்தாதி

உய்யும் உறவெல்லாம் உயிர்மூச்சு ஓய்ந்தபின் உடன்வருமோ
செய்யும் செயலெல்லாம் சிறுதொண்டாய்நின் சேவடி சேருமோ
நெய்யும் தேன்பாலுமாய் தெளிந்த பன்னீருமாய்
கொய்யும் குறுமலராய் மெய்யதுமாறுமோ நின்திருமேனி தீண்டவே.

சிவசங்கரி சிகிவாகினி சிவரஞ்சனி சிங்காரி சிவசக்தி
பவதாரிணி பரிபூரணி பஞ்சாட்சரி பரமேஸ்வரி பார்வதி
புவனேஸ்வரி பூரணி புரந்தரி பூதேவர் போற்றிடும்
தவவாகினி சக்திநாம முரைக்கச் சகலமும் ஜெயமே.

செயங்கொண்டு செகம்வென்று இகபர சுகங்கண்டு நின்பத்தியால்
பயம்தின்று பாவம்கொன்று புகழ்ச்சி சென்றுதாளாததுன்ப
மயம்கொன்று யான்கொண்ட மனமொன்று உனதென்று உவகைபூண்டு
சுயம்பென்று சோதியென்று வங்கக்கரை தங்கியநின் அடிபணிவனே.

காளி பாலா

சிவலிங்கம் 5 வகை

1.	சுயம்பு லிங்கம்	தானே தோன்றியது
2.	காண லிங்கம்	பிள்ளையார் – முருகன் போன்ற சிவ கணங்களால் நிறுவி வழிபட்டது
3.	ஆரிட லிங்கம்	முனிவர்களால் நிறுவப்பட்டது. அசுரர், இராக்கதர் அமைத்தவையும் இதனுள் அடங்கும்.
4.	தெய்வீக லிங்கம்	திருமால், பிரம்மா, இந்திரன் போன்ற தேவர்களால் அமைக்கப்பட்டது.
5.	மானுட லிங்கம்	மனிதர்களால் உருவாக்கப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காளிகாம்பாள் அருள்மணி மாலை

செந்தமிழ் திருநாட்டின் சென்னை மாநகர்
செந்தூர நாயகியாம் ஸ்ரீ காளிகாம்பாள்
வந்தித்து வழிகாட்டும் வடிவழகி
வண்ணமகள் திருக்கோலம் நவராத்திரி
அன்னையவள் அடியவர்க்கே அருளாட்சி
விண்ணவர்கள் மலர் தூவும் கண்காட்சி
சென்னபுரி நகரிலேயே காணும் காட்சி
திண்ணமாக திருமகளாய் திருக்காட்சி
உண்மையாக கலைமகளாய் உருவாட்சி
கண்ணிமையா காளிகாம்பாள் கருணையாட்சி
காண்பவர் மனமெல்லாம் மலர்ந்தாட்சி !

ஞானத்தின் திருவுருவாம் காளிகாம்பாள்
மோனத்தின் வீற்றிருக்கும் முகவழகி
கானத்தின் இசை கேட்கும் செவியழகி
வானத்தின் வண்ணம் காட்டும் வடிவழகி
தானத்தின் தலைச்சிறந்த கரமழகி
ஏனத்தின் வடிவெடுத்த நாரணனின்
கோனத்தை முறியடித்த நாராயணி
தேனொத்த திருவடியைக் கண்டிடவே
திருநவராத்திரி தேவியின் தரிசனமே !

சீரோங்கு சென்னையில் பாரோங்கும் பலகோயில்
சாரோங்கு காளிக்கோட்டம் கதிர்மதி தொழும்கோட்டம்
ஊரோங்கும் ஒருகோயில் உயர்விஸ்வகர்மர் கோயில்
தேரோங்கும் ஸ்ரீ சக்ரம்திகழ் திருக்காளிகாம்பாள் திருக்கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளிகாம்பாளைத் தொழுதால் கன்னியர் மணம் முடிப்பர்
காளையர் வேலைபெற்று இல்லறம் சிறக்க வாழ்வர்
நூலையும் கற்பர் சிறுவர் நுண்கலை பயில்வார் சிற்பி
காளிதாளையே பற்றினார்கள் தனியாரசாள்வர் தாமே

புவியினில் பிறந்தோர் வாழ புண்ணியச் செயல்கள்தேவை
தவித்திடும் ஏழைகட்டு தண்ணீரை வார்க்க வேண்டும்
பசித்திடும் பாமரர்க்கு பாலன்னம் கொடுக்க வேண்டும்
வலித்திடும் நோயினார்க்கு வளமான வார்த்தை வேண்டும்

இனித்திடும் காளிகாம்பாள் இவையெல்லாம் ஈவாள் வாழ்க !
தனித்திரு மனமே நித்தம் தாய்தினம் நம்மைக் காப்பாள்
பணிந்திடு பரவி வாழ்த்து பதமலர் பற்றிக் கொள்வாய்
கனிந்திடு கல்நெஞ்சத்தை கரைந்துநில் காளிகாளிகாளி ! என்றோம்.

பஞ்சோபசாரம்

தெய்வங்களின் விக்கிரகத்திற்கு சந்தனமிடுவது. பூ சார்த்தி அர்ச்சனை செய்வது, தூபம் காட்டுவது, தீபாராதனை செய்வது, நைவேத்யம் செய்து படைத்த பிறகே உண்ணுவது.

இந்த ஐந்து முறைக்கும் பஞ்சோபசாரம் என்று பெயர்.

இதில் சந்தனம் என்பது	நிலத்தையும்
பூ	ஆகாயத்தையும்
தூபமிடுவது	காற்றையும்
தீபாராதனை	நெருப்பையும்
நைவேத்தியமானது	நீரையும் குறிக்கும்.

ஆக, பஞ்சோபசாரம் செய்வதன் மூலம் இறைவனையும் பஞ்சபூதங்களையும் திருப்தி செய்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளிகாம்பாள் பதிகம்

திங்களும் கங்கையும் பொங்கவரு கதிர்களும்
சீரமீதமர்ந்திருக்க
தேவியே இமவான் தவத்தாலுதித்த நீ
திருத்தவத்தை ஏன் செய்கின்றனை
குங்குமம் மஞ்சளும் அணிந்தருள்புரிந்து
குறைதவிர்த்தாட் கொள்வதும்
குழவியாய் சிறுமியாய் குமரியாய் மங்கையாய்
கோலங்கொண் டெதிர் வருவதும்
தங்கநிற மேனியில் மங்கள நாண்அணிந்து
தவக்கோலமாய் வருவதும்
சடையாட இடையாட பாதச் சிலம்பாட
தகிடதோம் என்றாடியும்
அங்கிங்கெனாமலே எங்கினும் எதனிலும்
அம்மையுன்காட்சி வேண்டும்
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே. 1

அன்னபூரணியும் நீ அபிராமி அன்னை நீ
ஆதிபரமேஸ்வரியும் நீ
அண்டபகிரண்டமும் எண்டிசை கோணமும்
அனைத்தையும் படைத்தவளும் நீ
சன்னதி வந்துனது பொன்னடி போற்றவும்
சரணாகதி தருபவள் நீ
சண்டைகள் ஒழியவும் சமரசம் பெருகவும்
தக்கவர் தோன்ற வைப்பாய்
புண்ணியப் பாரதப் பூமியில் புனிதர்கள்
தோன்றிடச் செய்பவள் நீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புத்தியும் பக்தியும் சக்தியும் பெருகியே
புகழ் மணம் வீச வைப்பாய்
அன்னமும் வராகமும் அடிமுடி காணாத
அம்மையே மெய் யழகியே
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே. 2

குருடான பிள்ளையா யிருந்தாலும் உன்மீது
கோடிகவி பாடியிருக்கும்
கூறிடும் செவிடுமைப்பிள்ளைகள் புன்னகை
கூட்டியே வரவேற்றிடும்
திருடான பிள்ளைகள் எங்கெங்கே என்னென்ன
திருடலாமென்றிருக்கும்
தீயவர் சகாயமே நேயமாய் கொள்ளுவர்
திருந்துவது கடினமாகும்
முரடான பிள்ளைகள் வல்லிடு வழக்காடி
முட்டுவர் குட்டிச் சுவரில்
மோகமனதுள்ள நாச வேலை புரிந்து
பாசத்தை போக்குவிப்பர்
அரடான பிள்ளையாய் இருந்தாலும் அடியேனை
அன்போடு அரவணைத்தாய்
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே. 3

தலைமீதினி லேறி அமர்ந்துள்ள பிள்ளையோ
இனிமையாய் நகையாடிடும்
தோளினில் இயல்பாக குந்திடும் பிள்ளையோ
எனக்கென்ன குறையென்றிடும்
துடைமீதமர்ந்து சீரியெழும் பிள்ளையோ
சிலநேரம் விளையாடிடும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவடியில் மிதிபடும் பிள்ளையின்
சிரங்களோ சிவசிவா என்று சொல்லும்
சீர்மிகு திருவடி பட்டதும் தீவினைகள் அகன்று
ஜென்மம் பிறவா திருக்கும்
கொடுமையாய் மக்களைப் பிரிப்பதும் பார்ப்பதும்
குவலயம் நகைக் குதம்மா
கோரிவரும் பக்தரின் குறைகண்டு குறைநீக்கி
குணமாக்கி வாழ வைப்பாய்
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே. 4

கொஞ்சிடும் பிள்ளைகள் குறும்புகள் செய்யினும்
குளிர்முத்தம் தாய்தருவாள்
கோபமே வாராது பிள்ளையின் உச்சியைக்
கைகளால் நீவி விடுவாள்
நெஞ்சினில் அணைத்தவள் நீராட்டி சீராட்டி
நெற்றியில் பொட்டு மிடுவாள்
நினைத்த போதெல்லாம் குழந்தையின்
பெருமையை எடுத்துரைத்து மகிழ்வாள்
தஞ்சமெனவருவார்க்குத் தாமரைத் திருவடி
காட்டிக் கருணை பொழிவாய்
அருள்மாரி சுகுமாரி ஆனந்த கௌமாரி
அலங்காரி காளி உமையே
அஞ்சுபவர் கெஞ்சுவர் கெஞ்சுபவர் அஞ்சுவர்
அடாவடி செய்கையம்மா
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே. 5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மங்களச் சென்னையில் மங்கள காரினி
சிம்ம வாகனம் ஏறி வருவாய்
மட்டிலா ஆலயம் பெற்ற சென்னைபுரி
கோட்டையில் உலாவி வருவாய்
குலவிய முந்நீர்க்கடல் நீர் நுழையாமலே
சென்னையைக் காத்து நிற்பாய்
கூத்தாடுவாய் சிவனைப் பார்த்தாடுவாய்
உடல் வேர்த்தாடுவாய் வேகமாய்
சென்னை நகரை விட்டோடாமல் கலைமிகு
கால்கட்டு டனிருப்பாய்
கையினில் தாமரை கனிவான பார்வையுடன்
கருணைக் கடலாய் இருப்பாய்
அலைபாயும் மாந்தரின் நிலை மீறிடாமலே
ஐம்புலன் அடக்கி வைப்பாய்
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர் 6
அன்னை காளிகாம்பிகை உமையே.

தத்தகிட தித்திகிமி மத்தளமும் ஒத்துவர
நர்த்தனம் ஆடிவருவாய்
தவறாமல் திருவடிகள் புவிமீதுலாவிட
தகிடதோம் என்றாடுவாய்
பக்தர்கள் பாடிவர சித்தர்கள் சிந்தித்துவர
முத்தர்கள் துதித்து வரவே
பதநித சநிதப மகரிச என இசைபாடி
நடித்து வருவாய்
சத்தியம் நிலைத்திட வித்தகர் படித்திட
பித்தரும் ரசித்து வரவே
தகதிமி திமிதக தரிகிடதோ மென
தாவிக் குதித்து ஆடுவாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தனை துதித்து வரம் பெற்றுலகை காத்து
வரும் அதிரூப குணசுந்தரி
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே. 7

உன்னருள் பெற்ற மாவீரன் சிவாஜி
உன்னதப் புகழும் பெற்றான்
தன்னேரிலாத கவிக் கம்பன் காளிதாசன்
பாரதியும் பாரில் உயர்ந்து நின்றார்
விண்ணோர்கள் புகழ்பாடும் வேதாந்த நாயகி
விமலிநீ வித்தகி நீயல்லவோ
கண்ணேர் படாதிருக்க கடற்கரை பாராமல்
கரைமேற்கில் அமர்ந்து விட்டாய்
பெணரசே தேவி பெருமைமிகு
காளிகையே பேசா திருப்பதேனோ
பொன்னார் திருமேனியளே புவியரசை
வாழ்விக்கும் பூ தேவியே
அன்னையே மனது வைத்தென் குறை
செய்யினும் ஆட்கொள்ள வேண்டுமம்மா
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே. 8

ஓம் சிவசங்கரி கௌரி க்ருபாகரி
உத்தமி மாகாளியே
ஓயாது ஒழியாது உன்பாதம் பணிவார்க்கு
ஓடிவந்து அருள்புரிவையே
காயாது கனியாது கசிந்துருகாது மனம்
கருணையால் கனிய வைப்பாய்
சேயாது செய்திடினும் சிறியேனின் பெரும் பிழையை
தீயினுள் தூசாக்குவாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாயார யாம்பாடி வந்தித்து வணங்குவோம்
வந்தமர்வாய் மனதில்
மாயனது சோதரி மங்கையருள் மாணிக்கமே
மனங்கவர் மங்களாட்சி
தாயாக நீவந்து என்னைத் தாங்க
தடைகள் ஏதேனும் உண்டோ
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே.

கமடமாய் உன் அண்ணன் தவம் செய்து
கமடேஸ்வர வடிவமானார்
முடமாக கோலூன்றி வந்த முனிபிருகுவும்
நின்முன்னின்று வணங்கி நின்றார்
திடமுடைய அனுமானும் நின்கோயில்
வலம் வந்து சிரஞ்சீவி யானான்
விடமுடைய இராகு கேது கிரகங்கள்
தினமுனை வணங்குகின்றார்
நடையுடைய சரவணன் நின்திருமுகம் காண
வடகதிர் காமனான்
வெடையுடைய சித்தி புத்திகள்
வெரு வயிற்றான் துணைவியானார்
கடல்சூழ் வலம்வந்த ஆதிசங்கரர் ஆதி
சக்தியின் அருளும் பெற்றார்
அருள்பரவும் சென்னைபுரி பதியில்வளர்
அன்னை காளிகாம்பிகை உமையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளிகாம்பாள் கவசம்

மாந்தர் மனம் மகிழ் மகாத்மியம் நிகழ்த்திய
மாசக்தி வடிவே குறி ! மாசக்தி மனமே துதி. !

சக்தியை நோக்க சகல உலகமும்
சக்தியை அடைவர் செம்மனமுடையாள்
பக்தியினாலே பரவசமடைவார்
பாத கமலத்தைப் பற்றியே துதிப்பார்
சக்தியின் கவசம் தத்துவமாகும்
தத்துவம் அறிய கவசத்தடியாம்.

பர்வதராஜ புத்ரி பாதம் தொழவே
பாவங்கள் போகும்
பிரம்மசாரிணீ பிரேமையைக் கொண்டார்
பீடைகள் யாவும் அறவே நீங்கும்
சந்திர கண்டா சந்திர சடாதரி
சங்கரன் தேவி சந்தானமளிப்பாள்
கூஷ்மாண்டா எனும் கூரிய மதியாள்
கொடுமைகள் களைந்தே குறை தவிர்த்திடுவாள்
ஸ்கந்தமாதா கந்தனையீன்றாள்
கலியுகம் காக்கும் கலைகண்ணாவாள்
காத்யாயினியாய் கன்னிகை யானாள்
கன்னியாகுமரியில் கடுந்தவம் புரிவாள்
கால ராத்ரியாய் ஸ்ரீ காளத்தி யிலிருப்பாள்
காற்றாய் நின்றே கடமைகள் புரிவாள்
கௌரி மாதா மகேஸ்வரி தாயாய்
தனயரைக் காப்பாள்
சித்திப் பிரதா ஸ்ரீ துர்க்கா தேவி
சித்தியளித்தே சித்தம் குளிர்வாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருக வருக மகிஷாசூர மர்த்தினி
வருக வருக நவசக்தி தேவி
மகிடன் தலைமேல் மையல் நடஞ்செய்யும்
மயிலே மகிஷாசூர மர்த்தினி வருக
அகிலம் போற்றும் அம்மே வருக
அயனரி வாழ்த்தும் அழகே வருக
இமையோர் இடரினைக் களைந்தோய் வருக
இமகிரி வாசன் இமையே வருக
மதுகைடபரை மாய்த்தோய் வருக
மலர்மிசையோன் மகிழ் தேவி வருக
சும்பநிசும்பன் சூதினைக் கவர்ந்தோய்
சுருதிகள் கூறும் சுகமே வருக
சண்டன் முண்டனின் சமரினை வென்றோய்
சதுர்மறை போற்றும் சர்வேஸ்வரீ வருக
தூம்ரலோசனன் தூள் தூளாக
ஊங்காரத்தால் ஊதி முடித்தவள் வருக
தேவியின் கவசம் திருவுரு ஏற
சத்ரு சங்காரம் சடுதியில் முடியும்
காக்க காக்க கவசம் காக்க
கண்மணி துர்க்கா கடிதே வருவாள்
வருவாய் வருவாய் வாகை சூடுவாய்
குருவாய் வருவாய் அருள்வாய் தேவி
நினைக்க நினைக்க நெஞ்சில் அமர்வாள்
செல்வப் பெருக்கை சீக்கிரம் அளிப்பாள்
சவமாசனியே சாமுண்டா தேவி
மகிஷாசனியே வாராஹீ தேவி
கஜ வாகினியே ஐந்த்ரீ தேவி
கருட வாகினியே ஸ்ரீ வைஷ்ணவி தேவி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருஷபாசினியே மகேச்வரி தேவி

சிகிசிம்மாசனா கௌமாரி தேவி

அம்சஆசனி பிரம்ம வித்யா

சங்கு சக்ரம் கதை சக்தி ஆயுதம்

கேடகம் தோமரம் கோடரி கயிறு எந்தாயுதம்

பக்தரின் பயமே போக்க அசுரரின் தேகமழிய

அமரரின் நலமே காக்க ஆயுதமேந்தி வருக

காட்சிக் கொடுத்துக் காப்பாய் தாயே

காளியே திரிசூலியே காக்க

கிழக்கில் இந்திராணி காக்க

ஆக்னேய்யா அக்னி தேவதா காக்க

தெற்கில் வாராகி காக்க

நிருதியில் கட்கதாரிணி காக்க

மேற்கில் வாருணி காக்க

வாயு திக்கில் வாயு சக்தி காக்க

வடக்கில் கௌமாரி காக்க

ஈசானம் சூலதாரிணி காக்க

பிரம்மணி மேலே காக்க

விஷ்ணு சக்தி கீழே காக்க

தச திசை சாமுண்டா தேவி காக்க

ஜயா சக்தி என்முன் இருக்க

விஜய சக்தி என் பின் இருக்க

அஜிதா சத்தி இடப்பக்கம் இருக்க

அபராஜிதா சக்தி வலப்பக்கம் இருக்க

உத்யோதினி சக்தி சிகையை காக்க

உமாதேவி சிரசைக் காக்க

மாலாதாரி லலாடம் காக்க

யசஸ்வினி சக்தி புருவம் காக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரிநேத்ராதேவி புருவ மத்தியைக் காக்க

சுகந்தாதேவி யமகண்டா தேவி நாசிகைகள் காக்க

சங்கினீ சக்தி கண்களைக் காக்க

துவாரவாசினீ சக்தி காதுகளைக் காக்க

காளிகா தேவி கன்னம் காக்க

சங்கரீ தேவி கர்ணமூலம் காக்க

சர்ச்சிகா தேவி மேலுதட்டைக் காக்க

அம்ருதகலா தேவி கீழுதட்டைக் காக்க

சரஸ்வதி தேவி நாவைக் காக்க

கௌமாரி சக்தி பற்களைக் காக்க

சண்டிகை தேவி கழுத்தின் நடுவில் காக்க

சித்திர கண்டா உள்நாக்கைக் காக்க

மகாமாயா தாடைகள் காக்க

காமாட்சிதேவி மோவாய்க்கட்டையைக் காக்க

சர்வமங்களா தேவி வாக்கைக் காக்க

பத்ரகாளிகா கழுத்தினைக் காக்க

தனுர்த்தரீ தேவி முதுகெலும்பைக் காக்க

நீலக்கிரீவா தேவி கழுத்தின் வெளியைக் காக்க

நளகூபரீ தேவி கழுத்தின் எலும்பைக் காக்க

கட்கதாரிணி இருதோள்களைக் காக்க

வஜ்ரதாரிணி இரு புஜங்களைக் காக்க

தண்டினி தேவி கைகளைக் காக்க

அம்பிகைத் தாயே இருகைவிரல்களைக் காக்க

சூலேச்வரி நகங்களைக் காக்க

அனலேஸ்வரி கக்ஷகங்களைக் காக்க

மகாதேவி மார்பகங்களைக் காக்க

சோகவிநாசினி மனதைக் காக்க

லலிதாதேவி இருதயத்தைக் காக்க

சூலதாரிணி வயிற்றைக் காக்க

காமினிதேவி நாபியைக் காக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குகேஸ்வரி குதத்தைக் காக்க

மகிஷவாரினி அபானம் காக்க

பகவதி தேவி இடுப்பினைக் காக்க

விந்தியாவாசினி முழங்கால்களைக் காக்க

நரசிம்ம தேவி கணுக்கால்களைக் காக்க

மிதௌஜசி தேவி பின்னங்கால்களைக் காக்க

ஸ்ரீதரி தேவி கால்விரல்களைக் காக்க

தளவாசினிதேவி கீழ்ப்பாகங்கள் காக்க

தமஸ்ட்ராகாவி நகங்களைக் காக்க

ஊர்த்துவகேசினி கேசங்கள் காக்க

கௌமாரி மயிர்க்கால்கள் காக்க

வாகீஸ்வரி தோள்களைக் காக்க

பார்வதி தேவி இரத்தம் வீர்யம் மூளைகள் காக்க

காலராத்ரி குடல்களைக் காக்க

முகுடேஸ்வரி பித்த தாதுவைக் காக்க

பத்மாவதி தேவி ஆதாரத் தாதுவைக் காக்க

சூடாமணி தேவி கபதாதுவைக் காக்க

ஜ்வாலாமுகி நகங்களின் ஒளியைக் காக்க

அபேத்யா தேவி எல்லா சந்திகளையும் காக்க

பிரம்மாணிதேவி சுக்லம் காக்க

சத்ரேச்வரி நிழலைக் காக்க

தர்மசாரினி மனம்புத்தி அகத்தைக் காக்க

சக்ரினீ புகழ் கீர்த்தி அழகைக் காக்க

இந்திராணி கோத்திரம் காக்க

மகாலட்சுமி புத்திரர்களைக் காக்க

பைரவி மனைவியை காக்க

ஷேமங்கரீ வழியைக் காக்க

விஜயா எப்புறத்தையும் காக்க

ஜயந்தி எல்லா இடங்களும் காக்க

போற்றி ! போற்றி ! புவனேஸ்வரி காக்க !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போற்றி போற்றி பூமகளே போற்றி
போற்றி போற்றி பூமகளே போற்றி
எப்பொழுதும் எனையாட் கொள்ளும்
தாயே துர்க்கா சங்கரி போற்றி
கலைமகள் திருமகள் காளிகாம்பாள் போற்றி
கருணைக் கடலே கல்யாணி போற்றி

கமலேஸ்வரியே கண்ணிமைக்குள் வருவாய்
வருவாய் வருவாய் வண்ண மயில்மேல்
வித்யேஸ்வரியே பிரம்ம சொரூபி
சிம்ம வாஹினி சிவசங்கரியே
சின்மயானந்த சியாமள ரூபி
கண்முன் வருவாய் காலனை கடிந்தோய்
ஏக நாயகி இமயோர்க் கரசி
எல்லினும் இருட்டினும் இடை ஜாமத்தினும்
அல்லும் பகலும் அருளே புரிவாய்
அன்பும் பண்பும் அருளும் தந்து
பண்புடன் தாயே பாது காத்திடுவாய்

காளிகாம்பாள் கவசம் கருத்தொருமித்து
ஒருநாள் மும்முறை முறையாச் சொல்லி
ஓதியே உகந்து நீறணிந்தால்
அடைதற்கரிய அம்மா காளியை
அரை நிமிடத்திலே அடையாளம் காண்பீர்
அன்பன் ஸ்ரீ வித்யா உபாசகன் சொன்ன
அருள் கவசத்தை மருளாது ஓதி
மகிழ்வுடன் வாழ்க ! மங்களகரமாய் வாழ்க !!

சர்வ மங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதிகே
சரண்யே த்ரியம்பிகே கௌரி நாராயணி நமோஸ்துதே. !

Public domain. Digitization: Muthulakshmi Research Academy

அன்னையின் அருள்

காயத்ரி ஜெகதீசன்

அன்பின் உருவாய் ஆனாய் தாயே
அகிலம் போற்றும் அன்னை நீயே
நின்னாலயம் தொழுவோம் தினமும் தாயே
ஆதியின் பாதியும் அன்னையே நீயே
இன்பத்தின் ஊற்றாய் ஆனாய் தாயே
இறுதிவரை இணைந்து வரும் துணையும் நீயே
ஈதலில் இன்பம் வைத்தாய் தாயே
ஈரேழு லோகமும் நீயே
உயிரோடும் உணர்வோடும் கலந்தாய் தாயே
உண்மையும் சத்தியமும் நீயே
ஊனோடு உயிரானாய் தாயே
மனவூனத்தை போக்கினாய் நீயே
எத்திசைக்கும் அருள்புரியும் தாயே
என்னில் சரிபாதி நீயே
ஏகாந்த ஜோதி யானாய் தாயே
ஏழ்பிறப்பு கொடுத்தாய் நீயே
ஐங்கரன் அன்னை நீ தாயே
ஐயம் தவிர்த்தாய் நீயே
ஒப்பிலா அமுதம் நீ தாயே
ஒளி வடிவனாய் நீயே
ஓங்காரமாய் நின்றாய் தாயே
காளி என்று அழைக்கலானாய் நீயே
மகாகவி வெற்ற பேற்றை இன்று
நான் வெற்றேன் உனைப்பாடி !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தனம் செய்தேன் !

பிரம்மஸ்ரீ. டி. ஈஸ்வரமூர்த்தி, பி.எஸ்.சி.,
முன்னாள் அறங்காவலர்குழுத் தலைவர்

பல்லவி

வந்தனம் செய்தேன் உன்னை
வந்தெனக்குக் காட்சித் தருவாய்
செஞ்சடையோன் நாயகியே – காளீ (வந்தனம்)

சரணம்

தஞ்சமென்றே உன்னை
நம்பி வந்தே னம்மா
தயை புரிவாயம்மா – இங்கு
உன்னையல்லால் இந்த
ஏழைக்கு வேறொரு
கதியேது சொல்வாயம்மா. (வந்தனம்)

அஞ்சேல் என்றே இந்தத்
தரணியை ஆண்டிடும்
தாட்சாயணி யம்மா – இங்கு
உன்னையே நம்பிடும்
பேதை என் கலக்கத்தைக்
களைந் தருள் வாயம்மா. (வந்தனம்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காளிகாம்பாள் திருப்பல்லாண்டு

தெய்வத்திரு. **புலவர்.கோ. கண்ணன் ஆச்சாரி**, M.A., M.Ed.,
முன்னாள் அறங்காவலர்

கலைமகளே திருமகளே மலைமகளே
காலைக் கதிரொளியே
குலக் கொழுந்தே கொற்றவையே காளியெனும்
கலைக்கடலே கருணை ஈவாய்
